**ஹொரண பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஆகஸ்ட் 08 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹொரண பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 21,500,000 தொகையொன்று பொதுக் காசுக் கணக்கில் வேலைக் காசுக் கணக்கிற்கு மாற்றுகின்ற போது பிழையாக மூலதன மானியக் கணக்கு செலவு வைத்தலை சரிசெய்வதற்காக மூலதன மானியக் கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைத்தமையின் காரணமாக திரண்ட நிதியக் கணக்கு அந்த அளவால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) காசேட்டில் இரு தடவை பதியப்பட்ட மீதியொன்றை நீக்குவதற்காக ரூபா 6,682,829 தொகை திரண்ட நிதிய கணக்கில் வரவு வைத்து காசுக் கணக்கில் செலவு வைத்தமையின் காரணமாக காசு மீதியும் திரண்ட நிதியக் கணக்கும் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டில் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 409,886 இற்குரிய விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 43,597,495 ஆக

இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 16,006,325 ஆகும்.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 6,612,395 கூட்டுத்தொகையான நிலுவை வருமானம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 ஆதனவரி**

(அ) கணக்காய்வுத் திகதியான 2015 ஒக்தோபர் 29 ஆந் திகதி வரையில் கனன்வில பிரதேசத்தில் 19 தொழிற்சாலைகளிலிருந்து ரூபா 982,315 தொகையான நிலுவை ஆதனவரி மீதியில் 2015 திசெம்பர் 31 வரையில் ரூபா 503,627 தொகை அறவிட வேண்டியிருந்தது. மேலும் ரூபா 2,000 இற்கு மேற்பட்ட நிலுவை ஆதனவரி அலகுகள் 181 இனது நிலுவை ஆதனவரிப் பெறுமதி ரூபா 744,785 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதில் 162 அலகுகளிலிருந்து ரூபா 677,718 தொகை அறவிட வேண்டியிருந்தது.

(ஆ) கணக்காய்வுத் திகதியான 2015 ஒக்தோபர் 29 ஆந் திகதி வரையிலும் இங்கிரிய பிரதேசத்தின் நிலுவை ஆதனவரி மீதியில் ரூபா 5,000 இற்கு மேற்பட்ட மீதியொன்றுடன் உள்ள ஆதனவரி அலகுகள் 27 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றின் நிலுவைப் பெறுமதி ரூபா 220,005 ஆகும். 2015 திசெம்பர் 31 வரையில் ஒட்டுமொத்த நிலுவையில் ரூபா 50,399 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் நிலுவை மீதி ரூபா 169,606 ஆகும். அந்த நிலுவை மீதியில் இறப்பர் தொழிற்சாலையிலிருந்து மாத்திரம் ரூபா 59,136 நிலுவை ஆதனவரி மீதியொன்று அறவிடப்படாதிருந்தது.

(இ) கணக்காய்வுத் திகதியான 2015 ஒக்தோபர் 29 ஆந் திகதி வரையிலும் போறுவதண்ட பிரதேசத்தில் ஒட்டுமொத்த நிலுவை வரி மீதியில் 05 தொழிற்சாலைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 313,857 கூட்டுத் தொகையான ஆதனவரி மீதியில் 2015 திசெம்பர் 31 வரையில் ரூபா 239,678 தொகை அறவிடவேண்டியிருந்தது.

**2.2.3 கடை வாடகை**

இங்கிரிய உப அலுவலகத்திற்குரிய புதிய சந்தைத் தொகுதியில் 23 கடைகள் காணப்பட்டதுடன் 21 கடைகளிலிருந்து மாத்திரம் மாதாந்த வாடகை அறவிடப்படுகின்றமையும், எஞ்சிய 02 கடைகள் கணக்காய்வுத் திகதியான 2015 ஒக்தோபர் 29 ஆந் திகதி வரையிலும் கேள்வி கோரப்படாதிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டது.

**2.2.4 முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 59,023,630 கிடைக்க வேண்டியிருந்தது.

**2.2.5 அறிவித்தல் பதாதைக் கட்டணம்**

2014 நவம்பர் 21 ஆந் திகதிய இலங்கைக் குடியரசின் வர்த்த மானியின் பிரகாரம் 23 அறிவித்தல் பதாதைகளுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 286,750 அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2011 பெப்ரவரி 24 ஆந் திகதிய ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களின் பங்களிப்புப் பணம் ஊழியர் சேமலாப நிதியத்தின் செயலாளருக்கும் கணக்காளருக்கும் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாமல் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் தாமதமாக அனுப்பி வைக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 635,045 தொகை உரிய நிதியங்களுக்கு தண்டப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2002 முதல் 2012 வரையான கால எல்லையில் பெறுமதிசேர் வரிக்காகச் செலுத்த வேண்டிய பணம் செலுத்தாமையினால் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு 2015 சனவரி 29 அந் திகதி ரூபா 1,068,912 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,036,634 தொகையும் 2002 முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்குரிய தண்டப்பணமாக இருந்தது.

(இ) சபையினால் நடாத்தப்படுகின்ற நூலகங்களில் புத்தகங்களை வழங்கும் பிரிவில் வாசகர்களினால் 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் எடுத்துச் செல்லப்பட்டு 2015 யூன் 30 வரையிலும் மீளக் கையளிக்கப்படாத 335 புத்தகங்களின் பெறுமதி ரூபா 89,964 ஆக இருந்ததுடன் இந்த புத்தகங்களை மீளப்பெற்றுக் கொள்வதற்கோ அல்லது அவற்றின் பெறுமதியை உரிய தரப்பினர்களிடமிருந்து அறவிடுவதற்கோ சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மரணமடைந்த ஓய்வுபெற்ற மற்றும் சேவையை விட்டுச் சென்ற 16 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 63,521 தொகையான கடன் மீதி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 ஒக்தோபர் 29 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது 09 களஞ்சிய விடயங்களில் 203 அலகுகளின் பற்றாக்குறையொன்றும் ஒரு விடயத்தின் 12 அலகுகளில் மிகையொன்றும் அவதானிக்கப்பட்டன.

### 3.2 சுற்றாடல் அனுமதிப் பத்திரம் விநியோகித்தல்

2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க ஹொரண பிரதேச சபையின் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் செயல்நடைமுறைகளின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சுற்றாடல் அதிகாரசபையினால் சபை அதிகாரப் பிரதேசத்தில் சுற்றாடல் அனுமதிபத்திரம் பெறவேண்டிய 10 கைத்தொழில்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையிலும் 05 கைத்தொழில்களுக்காக மாத்திரமே அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(ii) 2001 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை சுற்றாடல் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்ட 42 நிறுவனங்கள் தொடர்பாக தொடர்ந்தும் அந்த நிறுவனங்கள் நடாத்திச் செல்லப்படுகின்றதா என உறுதிப்படுத்தி மீண்டும் அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 ஒக்தோபர் 30 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்க முடியுமான 10 துறைகளுக்குரிய நிறுவனங்களை இனங்கண்டு அந்த நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அனுமதிப்பத்திரம் விண்ணப்பிக்கின்றவர்களுக்கு மாத்திரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திர நடைமுறைகள் தயாரிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக பிரதேச சபையின் வருமானத்தைப் போன்றே மக்களுக்கு சாதகமான சுற்றாடலொன்றை அமைத்துக் கொடுக்கும் அடிப்படை நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4(i) ஆம் பிரிவின் பிரகாரம் எந்தவொரு செயற்பாட்டிற்காகவும் வழங்க வேண்டிய முற்பணத் தொகை மொத்த மதிப்பீட்டில் 20 சதவீதத்தை விஞ்சாதிருக்க வேண்டிய போதிலும் அதற்கு முரணாக சபைக்குச் சொந்தமான கெப் வண்டியொன்றை பழுதுபார்ப்பதற்காக மொத்த மதிப்பீட்டில் 50 சதவீதம் அதாவது ரூபா 114,000 முற்பணத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2014 யூன் 20 ஆந் திகதிய CSO/PTR/10/1/306 ஆம் இலக்க மேல் மாகாண உதவி பிரதம செயலாளரின் (பயிற்சி) கடிதத்தின் பிரகாரம் பதவிநிலை மற்றும் பதவி நிலையற்ற உத்தியோகத்தர்களின் பயிற்சி செயலமர்வுகளின் போது செலுத்தப்படுகின்ற படிகள், அந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுகின்ற வளப் பங்களிப்பாளர்களுக்கு மாத்திரமாக இருந்த போதிலும், இறுதிக் கணக்கு தயாரிப்பதற்காக வெளிப் பங்களிப்பாளர் ஒருவருக்கு மணித்தியாலமொன்றிற்கு ரூபா 1,200 வீதம் 12 மணித்தியாலங்களுக்காக ரூபா 14,400 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2014 சனவரி 21 ஆந் திகதிய இலங்கைக் குடியரசின் வர்த்தமானியின் 3A விதி இலக்கம் 02 இன் பிரகாரம் தலைவர் 2014 சனவரி முதல் ரூபா 2,500 தொகையான நிலையான பிரயாணச் செலவினப் படியொன்றைப் பெற்றிருந்ததுடன் 2014 சனவரி முதல் 2015 மே வரை 270 நாட்களுக்காக ரூபா 133,500 தொகையான இணைந்த படியொன்றையும் பெற்றிருந்தார்.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்